**மறைந்த முன்னாள் முதல்வர் செல்வி.ஜெ. ஜெயலலிதா அவர்களின் இருப்பிடமான வேதா நிலையத்தினை அரசு நினைவு இல்லமாக மாற்ற நில எடுப்பு சம்பந்தமாக அமைக்கப்பட்ட நிபுணர் குழு அறிக்கை**

மறைந்த தமிழ்நாடு முதலவர் / முதலமைச்சர் செல்வி.ஜெ. ஜெயலலிதா அவர்களின் இருப்பிடமான வேதா நிலையத்தினை அரசு நினைவு இல்லமாக மாற்றுவதற்கு நில எடுப்பு செய்ய 2013ம் ஆண்டு நிலம் கையகப்படுத்தலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவு மறைவின்மைக்கும், மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்விற்கான உரிமைச்சட்டத்தின் (மத்திய சட்டம் 30/2013) கீழ் நில எடுப்பு செய்ய நிர்வாக ஒப்புதல் அரசாணை (நிலை) எண். 180, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நினைவகங்கள்)த்துறை நாள் 5-10-2017ன் கீழ் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

நில எடுப்பு பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரங்களை மாவட்ட ஆட்சியர் விளக்கினார். கீழ்க்கண்ட நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது என தெரிகிறது.

| நாள் | எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|
| 05-10-2017 | நில எடுப்பு செய்ய நிர்வாக அனுமதி அளித்து அரசாணை எண். 180, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நினைவகங்கள்)த்துறை நாள் 5-10-2017 |
| 22-11-2018 | உத்தேசிக்கப்பட்ட நில எடுப்புக்கு பெருநகர சென்னை மாநகராட்சி தீர்மானம் வழங்கியது |

| | |
|---|---|
| 23-11-2018 | சமூக தாக்க மதிப்பீடு முகமை அமைத்து கூடுதல் தலைமை செயலர் / நில நிர்வாக ஆணையர் அவர்களால் ஆணை பிறப்பிக்கப்பட்டது |
| 14-12-2018 | சமூக தாக்க மதிப்பீடு முகமையால் வரைவு சமூக தாக்க மதிப்பீடு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது |
| 18-12-2018 | வரைவு சமூக தாக்க மதிப்பீட்டு அறிக்கை உரிய அரசு/ மாவட்ட ஆட்சியரால் பொதுமக்கள் பார்வைக்கு வெளியிடப்பட்டது/ |
| 02-01-2019 | பொது மக்கள் கருத்து கேட்பு நடத்தப்பட்டது. |

வரைவு சமூக தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையிலும், பொது மக்கள் கருத்து கேட்பு அடிப்படையிலும் நிபுணர் குழு கீழ்க்கண்ட விவரங்களை ஏக மனதாக ஏற்றுக்கொள்கிறது.

1. மறைந்த முன்னாள் முதல்வர் செல்வி. ஜெ.ஜெயலலிதா அவர்களின் இல்லத்தினை அரசு நினைவிடமாக மாற்ற அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது.
2. 2013ம் ஆண்டு நிலம் கையகப்படுத்ததிலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவு மறைவின்மைக்கும், மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்விற்கான உரிமைச்சட்டத்தின் (மத்திய சட்டம் 30/2013) கீழ் நில எடுப்பு செய்வது இதுவே முதல் முறையாகும்
3. உத்தேசிக்கப்பட்டுள்ள நில எடுப்பில், முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் செலவி.ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு சொந்தமான போயஸ் கார்டனில் உள்ள நிலம் மற்றும் கட்டிடம் இடம்பெறுகிறது. நிலத்தின் பதிவு விவரங்கள் கீழ்க்ண்டவாறு.

| | |
|---|---|
| வட்டம் | மைலாப்பூர் |
| வருவாய் கிராமம் | மைலாப்பூர் பகுதி-1 |
| பிளாக் எண் | 31 |
| ஆர்.எஸ்.எண் | 1567/50 |
| முனிசிப்பல் கதவு எண் | 36/81 |
| வகைப்பாடு | ரயத்துவாரி விடு வரி |
| விஸதீரணம் | 00 ஹெ 22ஏர் 60.00 ச.மீ<br>(10 மனை மற்றும 0322 ச.அடி) |
| உரிமையாளர் | நாட்டியகலா நிகேத் ஜெ. ஜெயலலிதா |
| புலத்தின் தன்மை | கட்டிடம் |
| நான்கு பக்க எல்லைகள் | கிழக்கு – 1567/63, 64 மற்றும் 43<br>மேற்கு – 1567/1 – சாலை<br>வடக்கு – 1567/1- சாலை மற்றும்<br>தெற்கு – 1567/73 |

4. சமூக தாக்க மதிப்பீட்டு முகமை சம்பந்தப்பட்ட பகுதியில் விரிவான மதிப்பீடு செய்தும், சம்பந்தபட்ட பகுதி வாசிகளிடம் கலந்துரையாடல் செய்தும், அவர்களுடைய கருத்துக்களை மிகுந்த கவனத்துடன் ஆவணங்களாக்கப்பட்டது.

5. உத்தேசிக்கப்பட்டுள்ள நிலஎடுப்பில் எந்த குடும்பமோ அல்லது மறுகுடியமர்வோ சம்மந்தப்படவில்லை என்பதால் சமூக தாக்க மதிப்பீட்டு முகமை தெரிவித்துள்ளவாறு சமூக தாக்க மேலாண்மை திட்டம் தேவைப்படவில்லை

என இந்த நிபுணர் குழு கருதுகிறது. இது ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இருக்கிறது.

6. மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள நிலஎடுப்பினால் சமூக தாக்க மதிப்பீட்டு முகமை தெரிவித்துள்ளவாறு சுற்றுப்புற சூழல் பாதிப்பு ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை எனவும், இந்த நிலஎடுப்பில் ஒரே ஒரு தனி வீடு மட்டுமே சம்மந்தப்பட்டுள்ளது என்பதாலும், மேற்படி முகமை தெரிவித்துள்ளபடி சுற்றுப்புற சூழல் பாதிப்பு தொடர்பாக மதிப்பீடு ஏதும் செய்ய வேண்டியதில்லை என இந்த நிபுணர் குழு கருதுகிறது.

7. இந்த உத்தேசிக்கப்பட்ட நிலஎடுப்பு தொடர்பாக உள்ளூர் பொதுமக்கள் மற்றும் பொதுமக்கள் பகுதிவாழ் மக்கள் ஆகியோருடைய கருத்துரைகள் நிலஎடுப்பு மற்றும் நிலஎடுப்பு கோரும் துறையின் குறிப்புகள் ஆகியவை மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

**<u>உள்ளூர் பொதுமக்கள் மற்றும் பொதுமக்கள் பகுதிவாழ் மக்கள் கருத்துரைகள் மீது கீழ்க்கண்ட விவரங்களை நிபுணர் குழு (Expert Group Committee) கண்டறிந்துள்ளது:</u>**

உள்ளூர் பொதுமக்கள் மற்றும் பொதுமக்கள் பகுதிவாழ் மக்கள் தெரிவித்துள்ள கருத்துரைகளில் பெரும்பாலும் போக்குவரத்து நெரிசல், போக்குவரத்து வாகனங்கள் உள்ளே வருவதும், வெளியே செல்வது, வாகனங்களை நிறுத்தும் இடம், அவசர சிகிச்சை மற்றும் தற்போதுள்ள முடிவுறும் சாலைகள் (Dead End Road),

குடிதண்ணீர், சுகாதாரம் ஆகியவற்றினை உள்ளடக்கியுள்ளது. மேலும், பகுதியின் பாதுகாப்பு, போயஸ் கார்டன் பகுதியின் அமைதி, குடியிருப்பு பகுதி வணிக பகுதியாக மாறுதல், ஸ்டெல்லா மேரி கல்லூரியினால் ஏற்படுத்தப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள ஆக்கிரமணம், நினைவிடத்தினை வேறு பகுதிக்கு மாற்றுதல், தொடர்பாக அறிக்கை பெறப்படாதது மற்றும் சிறுபான்மையினர் பொதுமக்களின் கருத்துக்கள், மற்றொரு பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்துவது சம்மந்தமான கோரிக்கை, சுற்றுப்புறச் சூழல் துறையின் அனுமதி பெறுதல் மற்றும் பகுதிவாழ் மக்களின் கருத்துக் கணக்கெடுப்பு நடத்துவது தொடர்பாக கேட்புத்துறை அளித்துள்ள குறிப்புரைகள் இணைப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>போக்குவரத்து / வாகனங்கள் நுழைவு மற்றும் மற்றும் வெளியேறுதல், வாகன நிறுத்துமிடம், அவசர சிசிக்சை உதவி மற்றும் தற்போதுள்ள குறுகிய சாலை முடிவுறும் சாலைகள்</u>**

போக்குவரத்து தொடர்பாக போக்குவரத்து காவல் துறையிடம் ஆலோசித்து நன்கு திட்டமிட்டு உரிய கவனத்துடன் நடவடிக்கை எடுக்கப்படும். அதிக எண்ணிக்கையிலான பகுதிவாழ் மக்களின் கருத்துக்களை பரிசீலித்து பார்வையாளர்களின் பார்வை நேரத்தை குறைத்து ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

வாகன போக்குவரத்து நெரிசலை குறைக்கவும், ஒழுங்குபடுத்தவும் போயஸ் கார்டனுக்கு வெளியில் உள்ள பகுதிகளில் மாற்று வாகன நிறுத்துமிடம் அதாவது செம்மொழி பூங்கா மற்றும் டிஎம்எஸ் போன்றவை பரிசீலனை செய்யப்படும்.

மேற்சொன்னவை அவசர சிகிச்சைக்கும் பொருந்தும். மேலும், சாலைகளில் ஆக்கிரமணம் ஏதும் ஏற்படின் அதனை அகற்ற நடவடிக்கை எடுத்து வாகன போக்குவரத்து மற்றும் அவசர ஊர்திகள் எளிதில் செல்ல நடவடிக்கை எடுத்து உறுதி செய்யப்படும்.

வாகனங்கள் வருவதும், வெளி செல்வது குறித்து அவ்வப்போது ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**மேற்படி கருத்துக்களை இந்த நிபுணர் குழு முழுவதும் ஏற்றுக் கொள்கிறது.**

மேலும், பார்வையாளர்களை ஏற்றி வரும் வாகனங்கள் மற்ற சுற்றுலா தளங்களில் உள்ளவாறே பார்வையாளர்களை ராதாகிருஷ்ணன் சாலையில் இறக்கி விட்டு, வாகனங்களை செம்மொழி பூங்கா மற்றும் டிஎம்எஸ் பகுதியில் வாகனங்களை நிறுத்தலாம் எனவும் அதேபோல் பார்வையாளர்களை மீண்டும் வந்து ஏற்றிச் செல்லலாம் எனவும் இந்த நிபுணர் குழு கருதுகிறது.

வாகனங்களை ஒழுங்குபடுத்துதல் குறித்தும் அதேபோல் போயஸ் கார்டன் உள்பகுதியில் வரும் வாகனங்களை ஒழுங்குபடுத்துவது குறித்தும் போக்குவரத்து காவல்துறை நடவடிக்கை எடுக்கலாம் எனவும், உரிய தடுப்புகளை காவல்துறை ஏற்படுத்தலாம் எனவும் இந்த நிபுணர் குழு கருதுகிறது.

மேலும், போக்குவரத்து காவல்துறையினர் போயஸ் கார்டன் பகுதியில் அப்பகுதி மக்களின் அமைதிக்கு பங்கம் ஏற்படா வண்ணம் போக்குவரத்தினை ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்கலாம் எனவும இந்த நிபுணர் குழு கருதுகிறது. இதுகுறித்து ஒரு திட்ட வரைபடத்தை இந்த நிபுணர் குழு அளிக்க விரும்புகிறது.

## <u>கட்டமைப்பு / குடிநீர் (ம) ஆரோக்கியம்</u>

போக்குவரத்தினை ஒழுங்குபடுத்தும் வகையில் தற்போதுள்ள கட்டமைப்பு பார்வையாளர்களை கையாள்வதற்கு போதுமானதாக உள்ளது. இருப்பினும் கூடுதல் கட்டமைப்புகளான தெருவிளக்குகள், குப்பைகளை சேகரிக்கு குப்பை தொட்டிகள் மற்றும் பிற வசதிகளை செய்து தர ஆலோசனை செய்யப்படும்.

அனைத்து பகுதிகளிலும் போயஸ் கார்டன் உட்பட அரசு போதிய குடிநீர் வசதி செய்து தர நடவடிக்கை எடுக்கப்படும்.

சம்மந்தப்பட்ட பகுதியை சுத்தமாக நிர்வகிக்க பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக உரிய சிறப்பு கவனம் செலுத்தி, காலமுறை அடிப்படையில் குப்பைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

**மேற்குறிப்பிடப்பட்டவற்றை இந்த நிபுணர் குழு ஏற்றுக் கொள்கிறது. மேலும், இந்த நிபுணர் குழு போதிய எண்ணிக்கையிலான பயோ டாய்லெட் வசதிகளை ஏற்படுத்தவும் மற்றும் பொதுமக்கள் நலன் காக்கும் வசதிகளை செய்து தரவும் பரிந்துரை செய்கிறது.**

## <u>முன்னாள் முதல்வர் அவர்களின் இல்லம் அமைந்துள்ள பகுதி மற்றும் போயஸ் கார்டன் பகுதிவாழ் மக்களின் பாதுகாப்பு மற்றும் அமைதி</u>

காவல்துறை மூலம் சம்மந்தப்பட்ட பகுதியில் போதிய அளவு பாதுகாப்பு வசதிகள் செய்து, வேதா நிலையம் மற்றும் போயஸ் கார்டன் பகுதியில் சமூக விரோதிகள் நுழையா வண்ணம் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல், வரும் பார்வையாளர்களை நிலையாக ஆய்வு செய்து, சமூக விரோதிகள் எவரும் நுழையா வண்ணம் நடவடிக்கை எடுக்கப்படும். மேற்படி நடவடிக்கைகளால் சம்மந்தப்பட்ட பகுதியின் பாதுகாப்பு மற்றும் அமைதி உறுதி செய்யப்படும். நிலஎடுப்பு கோரும் துறை தெரிவித்த உறுதிமொழியின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட பகுதியின் பாதுகாப்பு மற்றும் அமைதி உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மேற்படி கருத்துரைகளை இந்த நிபுணர் குழு முழுமையாக ஏற்றுக் கொள்கிறது.**

**<u>குடியிருப்பு பகுதியை வணிக பகுதியாக மாறுவது குறித்து</u>**

மேற்படி நினைவு இல்லம் வணிக பகுதியாக கருதப்படாது. எந்த வணிக நடவடிக்கையும் இப்பகுதியில் அரசாங்கத்தால் அனுமதிக்கப்படாது.

போயஸ் கார்டன் பகுதி முழுவதும் தனியாருக்கு சொந்தமானது என்ற கருத்து ஏற்றுக் கொள்ள இயலாது. காரணம் போயஸ் கார்டன் மற்ற குடியிருப்பு பகுதி போலவே இதுவும் ஒரு பொதுவான பகுதியாகும். நினைவிடத்தை பார்வையிட வரும் பார்வையாளர்களிடம் எந்தவித கட்டணமும் அரசாங்கம் வசூலிக்காது. மறைந்த மாண்புமிகு முன்னாள் முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் புகழினை பொதுமக்களுக்கு தெரிவிப்பது மட்டுமே அரசின் எண்ணமாகும்.

**மேற்படி கருத்துரைகளை இந்த நிபுணர் குழு முழுமையாக ஏற்றுக் கொள்கிறது.**

**<u>ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரி ஆக்கிரமணம் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது மற்றும் நடைபாதை வியாபாரிகளால் ஆக்கிரமணம் நடைபெறும் என்பது குறித்து</u>**

ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியினால் ஆக்கிரமணம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள புலமானது, அரசாணை நிலை எண்.2087, ஊரக வளர்ச்சி மற்றும் நிர்வாகத் துறை நாள்.26.12.1975-ன் மூலம் புல எண்.1565/2, பிளாக் எண்.31, மயிலாப்பூர் கிராமத்தில் 3 மனை மற்றும் 2205 ச.அடி விஸ்தீரணம் கொண்ட புலமானது ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரிக்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எனவே, இது ஒரு ஆக்கிரமணமாக கருதப்படாது. மேலும், சம்மந்தப்பட்ட கல்லூரி பல ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான இளவயது மகளிருக்கு கல்வி வழங்கி வருகிறது. இந்த அமைப்புக்கு இந்திய அரசியலமைப்பு சட்டம் பிரிவு 30-ன் கீழ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பிற்கு இடையூறு ஏதும் செய்ய இயலாது.

மேலும், மேற்குறிப்பிட்ட அரசாணையில் மேற்படி நிலம் ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரிக்கு அளிக்கப்பட்ட நிலத்தில், அதன் தன்மை மாறாது எந்தவிதமான கட்டுமானமும் மேற்கொள்ளக்கூடாது என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

கல்லூரி நிர்வாகமும் அரசாணையில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனையை ஏற்று இதுநாள்வரை எந்தவித நிரந்தர கட்டடமோ, பகுதி நிரந்தர கட்டடமோ அல்லது தற்காலிக கட்டடங்களோ கட்டவில்லை. மேலும், பார்வையாளர்களின் வாகனங்கள் போயஸ் கார்டன் பகுதியில் அனுமதிக்கப்படாததால், ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரி

வழியாக வாகனங்கள் வெளியேறுவது குறித்தான கேள்வி எழாது. இந்த நினைவகத்தினால் அதிகமான வாகன போக்குவரத்து ஏற்படாது. மாற்று ஏற்பாடுகள் குறித்து பரிசீலிக்க வழிவகை ஏதும் இல்லை. வேதா நிலையம் வரை வழிப்பாதையில் எந்தவித சிறுகடைகளோ, நடைபாதை வியாபாரிகளோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**மேற்படி கருத்துரைகளை இந்த நிபுணர் குழு முழுமையாக ஏற்றுக் கொள்கிறது.**

**நினைவில்லத்தை வேறு இடத்திற்கு மாற்றுவது மற்றும் வேதா நிலையத்தை நிலையாக ஒளிபரப்பு செய்ய தொலைக்காட்சி சேனலை உருவாக்குவது தொடர்பாக**

முன்னாள் மாண்புமிகு முதல்வர் செல்வி. ஜெ. ஜெயலலிதா வேதா நிலைய இல்லத்தில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வந்துள்ளார். மறைந்த முதல்வர் இறுதி மூச்சு வரை வாழ்ந்த இந்த இல்லத்தை அரசு நினைவு இல்லமாக மாற்றுவது அரசின் எண்ணமாகும். தொலைக்காட்சி அமைத்து வேதா நிலையத்தை நிலையாக ஒளிபரப்புவது அரசு மற்றும் பொதுமக்களின் எண்ணத்திற்கு பொருந்தாது மற்றும் இது ஒரு சிறப்பான நடவடிக்கையாகவும் இருக்காது.

**மேற்படி கருத்துரைகளை இந்த நிபுணர் குழு முழுமையாக ஏற்றுக் கொள்கிறது.**

**அறிக்கை பெறப்படவில்லை, சிறுபான்மையினரின் கருத்தின் மீது மற்றொரு கருத்துக் கூட்டம் நடத்துவது குறித்து**

2013ம் ஆண்டு நிலம் கையகப்படுத்தலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவு மறைவின்மைக்கும், மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்விற்கான

உரிமைச்சட்டத்தின் (மத்திய சட்டம் 30/2013) விதிகள் பிரிவு 6 (1)-ன் கீழ் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. சம்மந்தப்பட்ட நிலஎடுப்பு செய்யப்படும் பகுதியில் பொதுமக்களுக்கு சமூக தாக்க மதிப்பீட்டு முகமை உரிய அறிவிப்புகளை வழங்கியுள்ளது. அவை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

வரைவு சமூக தாக்க மதிப்பீடு அறிக்கை உரிய அரசு / மாவட்ட ஆட்சியர் அலுவலக வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. வரைவு அறிக்கையின் நகல்கள் பொதுமக்கள் பார்வைக்காக முக்கியமான இடங்களில் அதாவது வேதா நிலையம், பெருநகர சென்னை மாநகராட்சி வார்டு அலுவலகம், மண்டல அலுவலகம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பொதுமக்கள் கருத்துக்கணிப்பு தொடர்பாக பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்யப்பட்டு வரைவு அறிக்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது. இதனை எளிதாக எந்த ஒரு நபரும் பதிவிறக்கம் செய்து தெரிந்து கொள்ளலாம். எனவே, அறிக்கை பெறப்படவில்லை என்ற வாதம் ஏற்றுக் கொள்ள இயலாது.

அரசாங்கம் எப்போதும் பொதுமக்கள் கூறும் கருத்துக்களை கவனமாக பரிசீலனை செய்யும். இதில் சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் என்ற பாகுபாடு ஏதும் காட்டப்படுவதில்லை. 2013ம் ஆண்டு நிலம் கையகப்படுத்ததிலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவு மறைவின்மைக்கும், மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்விற்கான உரிமைச்சட்டத்தின் (மத்திய சட்டம் 30/2013) –ன் கீழ் மற்றொரு பொதுமக்கள் கருத்துக்கணிப்பு நடத்த வழிவகை இல்லை.

**மேற்படி கருத்துரைகளை இந்த நிபுணர் குழு முழுமையாக ஏற்றுக் கொள்கிறது. இதில் சட்ட நடவடிக்கைகள் முழுமையாக கடைபிடிக்கப்பட்டுள்ளது. மேற்படி மறுப்பு கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை என இந்த நிபுணர் குழு கருதுகிறது.**

**இத்துடன் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட விளம்பர நோட்டீஸ் நிபுணர் குழு இணைத்துள்ளது.**

**<u>சுற்றுப்புற சூழல் அனுமதி பெறுவது குறித்து</u>**

சம்மந்தப்பட்ட நிலஎடுப்பு செய்யும் பகுதி மறைந்த முன்னாள் முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தனது இறுதி மூச்சு வரை வாழ்ந்த இல்லமாகும்.

**இதில் சமூக தாக்க மதிப்பீடு முகமை எடுத்த நிலையினை இந்த நிபுணர் குழு முழுமையாக ஏற்றுக் கொள்கிறது.**

இந்த நிபுணர் குழு, போதிய பயோ டாய்லெட்ஸ் வசதிகளை போயஸ் கார்டன் பகுதியின் உட்புறம் மற்றும் வாகனம் நிறுத்தும் இடங்களில் ஏற்படுத்த பரிந்துரை செய்கிறது. அதேபோல் சம்மந்தப்பட்ட பகுதியினை பசுமையான பகுதியாக நிர்வகிக்க நடவடிக்கை எடுக்கவும் பரிந்துரை செய்கிறது. திட்டப் பகுதியின் விஸ்தீரணத்தை (10 மனை (ம) 0322 ச.அடி புலத்தில் அமைந்துள்ள ஒரு வீடு) கணக்கில் எடுத்துக் கொள்ளும்போது சுற்றுப்புறச் சூழலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்று இந்த நிபுணர் குழு கருதுகிறது. மேலும், திட்டப் பகுதி சுற்றுப்புறச் சூழல் பகுதிகளான காப்புக்

காடு, கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம், நீர்நிலைப் பகுதிகள் முதலியவற்றில் அமையப் பெறவில்லை என்பதால் சுற்றுப்புறச் சூழலுக்கு சிறிதளவும் பாதிப்பு ஏற்படாது.

இந்த திட்டப் பகுதியினை நிறைவேற்றும் மற்ற துறைகளுக்கு (அரசால் நியமிக்கப்படும் பொதுப்பணித்துறை (ம) மற்ற துறைகள்) அப்பகுதி வாழும் மக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வண்ணம் திட்டங்களை வகுக்க அறிவுரை வழங்கலாம் என இந்த நிபுணர் குழு பரிந்துரை செய்கிறது. கீழ்க்கண்ட சில ஆலோசனைகளையும் இந்த நிபுணர் குழு வழங்குகிறது.

1. கட்டுமானம் செய்யக்கூடிய பகுதியில் பச்சை நிற துணிகளை போர்த்துவதினால் தூசிகள் வெளியேறி அந்த பகுதிகளில் படிவதை தவிர்க்கலாம்.
2. கட்டுமான வேலைநேரத்தினை குறைத்து ஒழுங்குபடுத்துவதன் மூலம் அதனால் ஏற்படும் இரைச்சல் (ம) சப்தங்களை குறைக்க நடவடிக்கை எடுக்கலாம்.
3. தூசியினால் ஏற்படும் காற்று மாசுபாடினை குறைக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கலாம்.
4. அவ்வப்போது குப்பைக் கழிவுகளை அகற்றுவதன் மூலம் குப்பைக் கூலங்களின் குவியலை தவிர்க்கலாம்.

   எனவே, மேற்படி திட்டத்தில் பூகோளம் மற்றும் புவியியல் சார்ந்த எந்த தாக்கத்தினையும் ஏற்படுத்தாததினால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படும் என்ற கேள்வி எழாது.

**<u>கருத்துக்கணிப்பு நடத்துவது குறித்து</u>**

வேதா இல்லத்தை அரசு நினைவில்லமாக மாற்றுவது குறித்த நல்ல எண்ணத்துடன் 2013ம் ஆண்டு நிலம் கையகப்படுத்தலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவு மறைவின்மைக்கும், மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்விற்கான உரிமைச்சட்டத்தின் (மத்திய சட்டம் 30/2013) –ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதால் கருத்துக் கணிப்பு நடத்துவதற்கு அவசியமில்லை.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் எந்த ஒரு பொருள் குறித்தும் பொது கருத்துக்கணிப்பு நடத்த வழிவகை இல்லை. மேலும், கருத்துக் கணிப்பு மட்டும் இல்லாமல் பொது வாக்கெடுப்பும் நடத்த வழிவகை இல்லை என இந்த நிபுணர் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது.

**<u>சமூக தாக்க மேலாண்மை திட்டம் குறித்து</u>**

இந்த திட்டத்தில் முன்னாள் முதல்வருக்கு சொந்தமான, எந்த ஒரு நபரும் வசிக்காத ஒரு வீடு மற்றும் நிலம் நிலஎடுப்பில் சம்மந்தப்பட்டுள்ளது என்பதால் எந்த ஒரு நபர் அல்லது குடும்பம் இத்திட்டத்தினால் பாதிக்கப்படாது. எந்த நபரோ, குடும்பமோ பாதிக்கப்படாததால் சமூக தாக்க மேலாண்மை திட்டம் என்ற கேள்வி எழாது.

மேற்படி கருத்தினை இந்த நிபுணர் குழு முழுமையாக ஏற்றுக் கொள்கிறது.

**சம்மந்தப்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கேட்பில் பெறப்பட்ட ஆதரவான கருத்துரைகள், எதிரான கருத்துரைகள், ஆலோசனைகள் ஆகியவற்றை கவனமாக பரிசீலனை செய்து கீழ்க்கண்ட கருத்துரைகளை இந்த நிபுணர் குழு வழங்குகிறது.**

- இந்த திட்டத்தினால் எந்த ஒரு குடும்பமும் பாதிக்கப்படவோ/ மறு குடியமர்வு செய்யவோ அவசியம் ஏற்படவில்லை.
- இந்த திட்டத்தில் வேதா நிலையத்தில் உள்ள கட்டிடம் இடிக்கப்படாமல் புனரமைப்பு பணிகள் மட்டுமே செய்யப்பட உள்ளது. இதனால் பொது சொத்தோ, பொதுமக்கள் சொத்தோ பாதிக்கப்படவில்லை.
- முன்னாள் முதல்வரின் வசிப்பிடத்தை அரசு நினைவில்லமாக மாற்றும் இந்த திட்டத்திற்கு தேவைப்படும் குறைந்த அளவு விஸ்தீரண நிலம் மயிலாப்பூர் கிராமம், பகுதி 1, வார்டு எண்.118, பிளாக் எண்.31, சர்வே எண்.1567/50, விஸ்தீரணம் 22 ஏர்ஸ் 60 ச.மீ (10 மனை 0322 ச.அடி) –ல் உள்ளது.
- இந்த திட்டம் எந்த அரசாணைக்கும் எதிரானதாகவோ இல்லாமல் மறைந்த புகழ் வாய்ந்த முன்னாள் முதல்வரின் வசிப்பிடத்தை அரசு நினைவில்லமாக மாற்றும் திட்டமாகும். எனவே, மாற்று இடத்தில் நினைவில்லம் அமைப்பது என்ற கேள்வி எழாது.
- இந்த திட்டத்தில் குறிப்பிடத்தக்க சமூக தாக்கம் ஏதும் ஏற்படவில்லை என்பது இந்த நிபுணர் குழுவின் கருத்தாகும்.

- இத்திட்டத்தில் ஏற்கனவே உள்ள கட்டிடத்தில் புனரமைப்பது மட்டுமே நடைபெறுவதால் (அதில் ஒரு பகுதி மட்டும்) சுற்றுப்புறச் சூழ்நிலை குறித்து மதிப்பீடு செய்ய அவசியம் இல்லை. மேலும், பூகோளம் மற்றும் புவியியல் சார்ந்த பாதிப்பு ஏதும் ஏற்படாததால் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு மதிப்பீடு செய்ய அவசியம் எழாது.
- இத்திட்டத்தில் கையகப்படுத்தும் புலத்தில் குடியிருப்புகள் ஏதும் இல்லாததால் மறுகுடியமர்வு செய்வதற்கோ சமூக தாக்க மேலாண்மை திட்டம் ஏற்படுத்தவோ அவசியம் எழாது.
- இத்திட்டம் தொடர்பாக சமூக தாக்க மதிப்பீடு முகமை குழுவினர் சம்மந்தப்பட்ட பகுதியை பார்வையிட்டு வாகனங்களை நிறுத்துமிடம் குறித்தும் பார்வையாளர்களை ஒழுங்குபடுத்துவது குறித்தும் கருத்துரை தெரிவித்துள்ளது. வாகனங்களை நிறுத்துவதற்கு போயஸ் கார்டன் வெளிப்பகுதியில் அதாவது செம்மொழி பூங்கா (ம) டிஎம்எஸ் வளாகத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். செம்மொழி பூங்கா பகுதியில் 18 கிரவுண்ட் காலி மனை மற்றும் 15 கிரவுண்டு வாகன நிறுத்துமிடம் உள்ளது. இதில் 30 பேருந்துகள் மற்றும் 60 கார்களும் நிறுத்துவதற்கு வழிவகை உள்ளது. இதேபோல் டிஎம்எஸ் வளாகத்தில் 60 கார்கள் நிறுத்தலாம். தற்போதுள்ள நவீன பலஅடுக்கு வாகன நிறுத்தும் யுத்திகளை கையாண்டு அதிக எண்ணிக்கையிலான வாகனங்களை நிறுத்த நடவடிக்கை எடுக்கலாம்.

- பார்வையாளர்களின் வரவுகளை ஒழுங்குபடுத்தலின் ஒரு பகுதியாக கவர்னர் மாளிகையில் கடைபிடிக்கும் முறைபோல இணையவழியில் பார்வையாளர்கள் முன்னதாக பதிவு செய்து பார்வையிட்டால் நலமாக இருக்கும் என சமூக தாக்க மதிப்பீடு முகமை கருத்து தெரிவித்துள்ளது. இதனால் போக்குவரத்து நெரிசலையும், பாதுகாப்பு தொடர்பான சர்ச்சைகளையும் தவிர்க்கலாம் எனவும் பரிந்துரை செய்துள்ளது. சம்மந்தப்பட்ட புலத்தை பார்வையிட்டதன் அடிப்படையில், பார்வையாளர்கள் விடுமுறை அல்லாத வார நாட்களில் காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரையிலும், விடுமுறை தினங்களில் காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரையிலும் பார்வையிடலாம். இவ்வாறு செய்வதினால் வழக்கமாக நடைபயிற்சி மேற்கொள்பவர்கள் மற்றும் வயதானவர்கள், குழந்தைகள் பாதிக்கப்படமாட்டார்கள்.
- ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியினால் ஆக்கிரமணம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள புலமானது, அரசாணை நிலை எண்.2087, ஊரக வளர்ச்சி மற்றும் நிர்வாகத் துறை நாள்,26.12.1975-ன் மூலம் புல எண்.1565/2, பிளாக் எண்.31, மயிலாப்பூர் கிராமத்தில் 3 மனை மற்றும் 2205 ச.அடி விஸ்தீரணம் கொண்ட புலமானது ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரிக்கு முறையாக நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது என இந்த நிபுணர் குழு கருதுகிறது. மேலும், சம்மந்தப்பட்ட கல்லூரி பல ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான இளவயது மகளிருக்கு கல்வி வழங்கி

வருகிறது. இந்த அமைப்புக்கு இந்திய அரசியலமைப்பு சட்டப் பிரிவு 30-ன் கீழ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த அமைப்பிற்கு இடையூறு ஏதும் செய்ய இயலாது என இந்த நிபுணர் குழு கருதுகிறது.

- மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்தியாவில் உள்ள அனைத்து மகளிருக்கும் முன்னுதாரணமாக செயல்பட்டு, எதிர்க்க இயலாத, தனது இறுதி மூச்சு வரை சோர்வில்லாமல் உழைத்து ஆணாதிக்க சமூகத்தில், அரசியலில் தனது சாதுர்யமான மறுக்க முடியாத நடவடிக்கையால் அரசாங்கம் அன்னாரது இல்லத்தினை அரசு நினைவில்லமாக மாற்ற நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.
- எனவே, இந்த நிபுணர் குழு, மேற்படி வேதா நிலையத்தினை அரசு நினைவில்லமாக மாற்றுவது குறித்து முழுமையான பரிந்துரையை செய்கிறது. இந்த திட்டம் பொதுமக்களுக்கு பயன் உள்ளதாக அமையும் எனவும் இந்த நிபுணர் குழு கருதுகிறது.
- இந்த திட்டத்தினால் சமூக தாக்கமோ அல்லது நிலஎடுப்பு பகுதியில் மறுகுடியமர்வோ செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.
- மேலும், எதிர்காலத்தில் இந்த திட்டத்தினை நடைமுறைப்படுத்தும்போது ஏற்படும் எதிர்பாராத பாதிப்புகளை சட்ட விதிகளுக்கு உட்பட்டு குறைக்கலாம் என்பதனை இந்த நிபுணர் குழு பதிவு செய்கிறது.

| வ.எண். | நிபுணர் குழு உறுப்பினர்களின் பெயர் (ம) பதவி | கையொப்பம் |
|---|---|---|
| 1 | திருமதி. எஸ். அனிதா<br>மாவட்ட வருவாய் அலுவலர் (ம)<br>மண்டல அலுவலர், மண்டலம்-9,<br>பெருநகர சென்னை மாநகராட்சி,<br>உள்ளாட்சி துறை சார்பில் பிரதிநிதி-1<br>(ம) நிபுணர் குழுவின் தலைவர் | |
| 2 | திரு. சுபாஷ்,<br>செயற்பொறியாளர், மண்டலம்-9,<br>பெருநகர சென்னை மாநகராட்சி,<br>உள்ளாட்சி துறை சார்பில் பிரதிநிதி-1 | |
| 3 | டாக்டர். லில்லியன்,<br>மக்கள் தொடர்பு அலுவலர் /<br>குறைதீர்க்கும் அலுவலர் (R)/ CMDA,<br>(தற்பொழுது சமூக முன்னேற்ற (ம)<br>திட்ட ஆலோசகர் KRUPA, NGO)<br>அலுவல் சாரா சமூக அறிவியலாளர்-1 | |
| 4 | Dr. NUDIYNY க/பெ பிரபாகரன்,<br>அலுவலர் சாரா சமூக அறிவியலாளர்-2 | |
| 5 | திருமதி. மான்சிங் கீதா சாமுவேல்,<br>Chief Planner ( R), CMDA,<br>நிபுணர் குழு உறுப்பினர்-1 (மறுவாழ்வு) | |
| 6 | திருமதி. விஜயா வெங்கடேஷ்,<br>நிபுணர் குழு உறுப்பினர்-2 (மறுவாழ்வு) | |
| 7 | திரு. இமானுவேல் ஜெய்கர்,<br>உதவி செயற்பொறியாளர்,<br>பொதுப்பணித்துறை – கட்டிடங்கள்,<br>தொழில்நுட்ப நிபுணர். | |